26

28 FEB 1921
MADRAS

உ

# கல்யாணசந்திரிகை.

தமிழ் நாடெங்கும் கியாதி பெற்ற

826
1·21

மதுரை ஸ்ரீ

துரைஸ்வாமி ஐய்யரவர்களால்

இயற்றப்பெற்றது.

FIRST EDN. 1000 COPIES

PRINTED AT THE
Manonmony Vilas Press Madura.
] ரிஜிஸ்டர் காபிரைட் [அணா 4
1921.

O-, IMOS, K.
N21
12545

உ

ஸ்ரீ அராளகேசீஸமேத ஸ்ரீரத்திநகிரீசர் துணை.

# கல்யாணசந்திரிகை.

இஃது

திருச்சிராப்பள்ளி ஜில்லா, குளித்தலைத் தாலூகா

மணத்தட்டை

சின்னஸாமி அய்யரவர்கள்குமாரரும்,

முன் தென்னிந்தியா ரெயில்வே சீப்கார்டும்,

பின் போட்டோகிராப் வேலையிற் சிறந்த தேர்ச்சியடைந்து

தமக்கொப்புயர்வு இல்லையென

ஆங்கில கெவர்ண்மெண்டு உள்நாட்டு வெளிநாட்டு

அநேக உத்யோகஸ்தர்களிடமும் ஜமீன்களிடமும்

பிரக்கியாதியான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பொன்மெடல்கள்

முதலிய பரிசுகள்பெற்றவரும், திருச்செந்தூர் ஸ்தலபுராண

ஸங்கிரக புத்தகத்தின் நூலாசிரியரும்,

தமிழகக்கருத்துள்ள நாவலீஸ்டுமான

பிரும்மஸ்ரீ

## S. துரைஸாமி அய்யரவர்களால்

இயற்றப்பட்டு

மதுரை வடக்குமாசிவீதி

மனோன்மணிவிலாஸ அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1921.

முதற்பதிப்பு-1000 காப்பிகள்.

*Copy Right Registered.* காபி ரயிட் ரிஜிஸ்தர்ட்

826
1.21
OFFICE OF THE REGISTRAR
23 FEB 1921
MADRAS

23 FEB 1921

# முன்னுரை.

எனதன்பார்ந்த நேயர்காள்! இவ்வகிலப் பிரபஞ்சத்தின் கண், கல்விப்பயிற்சியுற்ற மானிடப்பிறவிகளின் மனத்தினுக்கு எக்காலத்திலும் குதூஹலமான சந்தோஷத்தைத் தருவதும் அற்புதாநந்த ஸங்கித ஞானத்தையுண்டுபண்ணக்கூடியதுமான "கல்யாணசந்திரிகை" என்ற இப்புத்தகத்தை நமது அருந்தவச்சிறுமிகளான பாலியப்பெண்பிள்ளைகள், மிக்க எளிதாகவும், ஸங்கித முறையாகவும், படிக்க இனிய நற்றமிழ் நடையிலும், கானஞானமுண்டாகபற்பலவிதராகதாள நூதன வர்னமெட்டுகளிலும், ஆத்மார்த்தமாக பக்திரஸங்களிலும், மனோத்ஸாகமுண்டாக சிருங்காரரஸங்களிலும், யுக்தாநுபவ சமத்காரமாயும் ஸங்கித ஞானத்தினியல்பினுக்குறியதாயும் அமைத்து கேவலம் பச்சைப்பதங்களின்றி படிப்பவர்களுக்கு ஸதிபதிவிசுவாஸமும் தெய்வபக்தியும் மனவானந்தமுமுண்டாகி அதிகசிரமமின்றி ஸங்கீதத்தேர்ச்சி விருத்தியாக வேண்டுமென்பதே எனது முதன்மையான அந்தரங்கக்கருத்தாகும்.

இதற்கு முன் 'நலுங்குப்புஸ்தகம் முதற்பாகம்' எனவொன்றும், 'கல்யாணப்பாட்டுகள்' எனவொன்றிரண்டு மூன்று பாகங்களும், பார்ஸி ஹிந்துஸ்தானி கல்யாணப்பாட்டுகள் முதற்பாகம் எனவொன்றும் ஆகிய ஐந்திலும் ஒவ்வொன்றிலும் அநேகம் ஆயிரம் பிரதிகள் பதிப்பிவித்து, காபிரயிட் ரிஜிஸ்தரும் செய்துள்ள புத்தகப் பிரதிகளெல்லாம் திருநெல்வேலி ஜில்லாவிலேயே சிலவழிந்துவிட்டன. ஆகையால், தற்பொழுது அவைகளிலுள்ள சிற்சில பாட்டுகளுடன் பின்னும் விசேஷமான பார்ஸி ஹிந்துஸ்தானி, ஜாவளி, கீர்த்தனை, தேவாரம், திருப்புகழ், இங்கிலிஷ் நோட்ஸ் முதலிய பற்பல தினுசுகளிலும் நூதனவர்னமெட்டுகளாலமைத்து, சில தமிழிலும் சில இங்கிலீஷிலும் சில இங்கிலீஷ்தமிழ் இரண்டுமிடையே கலந்து மிசைத்து, அதிபாலியப்பெண்பிள்ளைகள் விவாஹ காலத்திலும், மற்று சுபசோபனாதி ஸமயங்களிலும் பாடவேண்டி

மாலைமாற்றல், கன்னூஞ்சல், நலுங்கு, பந்தாடல், பத்தியம், கோலாட்டப்பாட்டுகள், முதலியவையால்சிறப்பித்து இவ்வறிய புத்தகத்தை வெளியிடலாயினேன். பண்டித் சிகாமணிகளும் எனது நண்பர்களுமாகிய சகோதர-சகோதரிகளே! என்னு லோ அச்சுப்பிழைகளினுலோ இதில் தவறுதலாக ஏற்படும் சொற்குற்றம் பொருட்குற்றம் முதலிய பிழைகளை பாராட் டாது மிக்க அன்புடன் அங்கிகரித்தாதரிக்க வேண்டிப்பண் முறையும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உங்கள் இஷ்டன்

☞ S. துரைஸாமி.

---

## ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனுல் சகல அச்சுக்கூடத்ததிபர்களுக்கும், புத்தகவியா பாரிகளுக்கும் மற்றுமுள்ள சகலமானவர்களுக்கும் தெரிவித் துக்கொள்ளுகிறதென்னவென்றால் கல்யாணசந்திரிகை என்ற இப்புஸ்தகம் அடியிற்கையொப்பமிட்டிருக்கிற என்னாலியற்றப் பெற்று அச்சிட்டு ரிஜிஸ்தர்செய்யப் பெற்றிருப்பதால், இதனை எவ்விதத்தினும் எம்மையும் எனது சுதந்தரவாரிஸாக்கர்ரரை யும் தவிர பிறர் அச்சிட்டால் நாங்கள் கோரும் நஷ்டத்திற்கு உடன்படக்கடமைப்பட்டவர்களாவார்களென்றும் அறிவிக்க லாயினேன்.

துரைஸாமி அய்யர்
இந்நூலாசிரியர்.

உ

சிவமயம்.

# கல்யாண சந்திரிகை.

## விநாயகர் காப்பு.

வெண்பா.

முன்னவன்மு னின்றுன் முடியாத தொன்றுளதோ
அன்னவனை யானு மடிபணிந்தே—நன்னலுங்கு
மங்களமாப் பாடுவதை மானிலத்தோர் கொண்டாட
ஐங்கரத்தான் றுளே யரண்.

## சுப்பிரமணியர்.

மங்களஞ்சேர் வள்ளி மருவுகுரு தேசிகநின்
பங்கயத்தாள் போற்றும் பழவடியர்—சங்கமதி
லென்னை யொருவனு யென்மா சகன்றிடவுன்
பொன்னடியைத் தந்தருளிப் போது.

## சரஸ்வதி.

வெள்ளை மதகரியன் விண்ணவர்கோன் மங்கைக்கும்
வள்ளிக்கு நாயகனை வாழ்த்துரைப்பத்—தெள்ளமுதச்
செஞ்சொற் பிழையகற்றிச் சீர்பரவ வாணியின்பொற்
கஞ்சமலர்க் காலிணையே காப்பு.

## 1 கௌரி கல்யாணம்.

இ-ம் குறிஞ்சி, கண்டஜாதி, ஏகதாளம்.

பல்லவி.

கௌரீகல்யாணமே வைபோகமே. (கௌ)

சரணங்கள்.

1 ஜெயமதுராபுரீச ஜெயதிவ்ய க்ஷேத்ரா
ஜெயசுந்தரீஸஹித ஜெயமூர்த்தி ரூபா (கௌ)

2 இன்பமிகுதுரைஸாமி இயற்றும்பதம்பாட
அன்புமிகுமீனுக்ஷி அருள்கண்ணுல் நோக்க (கௌ)

## 2 ஷெ மெட்டு வேறு.

1 ஜெயசங்கரீபுத்ர ஜெயதிவ்ய க்ஷேத்ரா
ஜெயஸரோருகநேத்ர ஜெயமேரு காத்ரா (ஜெ)

2 மங்கைதெய்வானையைமணந்த சிங்காரா
வள்ளியொருபுறமமர் வடிவேலா சூரா (ஜெ)

3 அன்புமிகுந்துரைஸாமிஅரும்பதம் பாட
அனுதினமுமுருகன் சீராடிக் கொண்டாட (ஜெ)

## 3 மாலைமாற்றல்.

ஆயகரோ மேரே தரிதேஸே வார்ரியா என்ற பார்ஸிமெட்டு.

பல்லவி.

மாலையிட்டாள்தேவி மதுராபுரீசற்கு (மாலை)

சரணங்கள்

கோலமாயம்மான்மேல் குதூஹலமாயிருந்து
ஞாலமதிசயிக்க மா--லையிட்டாள்தேவி. (மாலை)

மாக்ஷியாயிருவரும் மாற்றியாநந்தமதாய்
காக்ஷிதரவெல்லோரும் கண்--டுமகிழவே. (மாலை)

மண்டலம்மீதினில் பண்துரைஸாமிபாட
கண்டதிசயமென எண்--டிசையும்போற்ற. (மாலை

## 4 ஸ்ரீராமச்சந்திரனே என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 ஸ்ரீமீனலோசனி ஸ்ரீசுந்தரேசருக்கு
திருக்கரங்களினாலே மாலையை
சாற்றினாள் மாலை மாற்றினாள். (ஸ்ரீ)

2 பிச்சிமலர்ரோஜா பிரியமுள்ளசெண்பகம்
பச்சைமருவுள்ள மாலையை
சூட்டினாள் மாலை; சூட்டினாள். (ஸ்ரீ)

3 குண்டுப்பூ மலர்மாலை செண்டுப்பூவால்கட்டி
எண்டிசையும் புகழ் ஏற்றினாள்
ஏற்றினாள் மாலை போற்றினாள். (ஸ்ரீ)

4 விப்ரன் துரைஸாமி வெண்பதங்கள்பாடி
சுப்ரமாயருள்தரத் தோற்றினுள்
தோற்றினுள் ஜயம் சாற்றினுள். (ஸ்ரீ)

## 5 கன்னூஞ்சல்.

நோட்டு மெட்டு.

கண்ணிகள்.

1 ஆடினுள் கன்னூஞ்சல் அழகிய மீனம்பிகையம்பாள்
கோடிநவரத்நமணி மீதில்திவ்யகோலமிழைத்தபந்தலிலே. (ஆ)

2 சின்மயசுந்தரேசருடன் திருக்கல்யாணமேடையிலே
மின்னமுகிமீனக்ஷியம்மன்உன்னதமாய்மனம்கிழ்ச்சியுடன். ஆ

3 சுற்றிநிற்கும்நர்த்தனமாதுகள் துரைஸாமி பதமேபாடிடவே
வெற்றிவாழிவிஜயம்கூறிவைபோகமாகக்கொண்டாடவே. ஆ

## 6 வேறு.

"புவோதுந்தன" என்ற இந்துஸ்தானி மெட்டு.

கண்ணிகள்.

1 செடிப்பன்னீர்வாடை - திவ்யமாய்வீச
கடிமலர் - விரிந்திடவே
குடைமல்லிப் புஷ்பங்கள் - குமுகுமெனவே
புடைசூழ் பொழியப்பூ. ஆ......ஆ (செ)

2 மின்னணிமாதர்கள் - மிக்கக்களிக்க
மீனம்பிகையம்பாள்
உன்னதமாகவே - ஊஞ்சலிலமர்!
உதித்தாள் வெகுசிறப்பாய். ஆ......ஆ (செ)

3 அன்பன் துரைஸாமி - அழகூஞ்சல்பாட
நன்னயமெட்டுடனே
சன்னதமாகவே - கன்னூஞ்சலாட
சக்தியுமரனுமாய். ஆ......ஆ (செ)

## 7 வேறு.

இ-ம்.-கமாஸ்-ஆதி-தாளம்.

பல்லவி.

ஆடினாள் கன்னூஞ்சல் அரனுடனே (ஆடி)

அநுபல்லவி.

ஆடினாளூஞ்சல் அம்பாள்மீனாக்ஷி (ஆடி)

சரணங்கள்.

1 தண்குமுதமேயொத்த தனிமலர்பாதத்தால்
கிண்கிணியொலிகேட்கா கேலமாயாட்ட (ஆடி)

2 வேண்டியேசுந்திரர்மேல் மீனாக்ஷிமுகம்நோக்க
நாணுடைமையாக நாற்புரம்நோக்கி (ஆடி)

3 தஞ்சமென்றநுதினம் ஸன்னிதியில்வரும்
செஞ்சொல்துரைஸாமி சீர்பதம்பாட (ஆடி)

## 8 வேறு.

என்முகம் பார்த்தருளையா என்றமெட்டு.

பல்லவி.

ஆடினாள் மீனாக்ஷியூஞ்சல் - திவ்ய
ஆணிப்பொன் தளமிட்ட அழகியமேடையில்
(திவ்ய) - அழகியமேடையில். (ஆடி)

சரணங்கள்.

1 கோடிமதிமுகத்தாள் - கோமளதேகத்தாள்
தேடிச்சுந்திரர்தனை - நாடிமணம்புரிந்து
(அம்பாள்) நாடிமணம் புரிந்து.

2 மங்களவுல்லாஸி - மஹிமைப்ரகாசி
திங்கள்முகவிலாஸி - திவ்யமந்தஹாஸி
(அம்பாள்) திவ்யமந்தஹாஸி. (ஆடி)

3 சுத்தசுயம்பிரகாசி - ஜோதியாந்தவாஸி
பத்தாக்கிரங்கிகிதம் - பரமதயாநிதியாய்
[அம்பாள்] பரமதயாநிதியாய். (ஆடி)

4 பன்னுதமிழ்துரை - ஸாமிதுதிக்கிரங்கி
மின்னாள்மீனாக்ஷியும் - மேவிக்கண்ணோக்கியே
(அம்பாள்) மேவிக்கண்ணோக்கியே. (ஆடி)

## 9 ஊஞ்சல்.

1 சீர்சிறந்த நவரத்னக் கால்கணூட்டி
சிவந்தநற்பவழத்தால் வீட்டம்வாட்டி
வார்சிறந்தவயிரத்தால் சரங்கள்பூட்டி
வரிசையுடன்மாணிக்கக் கொடுங்கைசூட்டி
தார்சிறந்தவைடூர்யப் பலகைகூட்டி
தளப்பொன்னூலிணைச்சங் கிலிகள்மாட்டி
ஊர்சிறந்தகண்காக்ஷிச் சேர்வைகாட்டி
உத்தமிமீனாக்ஷிசுந்த ராடிரூஞ்சல்.

2 வாஸமுறுஞ்சந்தன மரங்களாலே
வரிசையுடன்ஒழுங்காகக் கால்கணூட்டி
மாசிலாமணமிகுந்த அகில்களாலே
மாக்ஷிமையாயிழைத்துப்பல விட்டந் தீட்டி
நேசமதாய்க்கருங்காலிச் சரங்களிட்டு
நேர்வரிசையுடன்சந்தப் பலகைவாட்டி
ஆசையுடன்ஆணிப்பொன்சங் கிலிகள்மாட்டி
அருமைதுரைஸாமிஊஞ்சல் பாடியாட.

## 10 வேறு

☞ இந்த ஊஞ்சலை லாலியாகவும் பாடலாம்

1 மணிமாலை மலர்மாலை மார்பிற்சூட
மரகதமாம் பச்சையொடு மாலையாட
அணியான பூப்பந்த லசைந்தேயாட
அம்மையாம் மீனாக்ஷி ஆடிரூஞ்சல்.

2 பாதசரங் கலகலெனப் பணிகள்மின்ன
பதக்கமுடன் ரத்னகண்டி மாலைதுன்ன
மாதர்பல சுற்றிநின்று ஊஞ்சல்பன்ன
மனோன்மணியாம் மீனாக்ஷி மகிழூஞ்சல்.

3 மணியாடப் பணியாட மதாணியாட
வளையாடக் கலையாட மாலையாட
அணியாட இடையினொட் யாணமாட
அம்பிகையாம் மீனாக்ஷி ஆடிரூஞ்சல்.

4 எண்ணான்கு அறத்தினையும் இதயத்தெண்ணி
எண்டிசையும் புண்ணியமே நிறையப்பண்ணி
விண்ணாளும் பதியின் பதமேவநண்ணி
விபரன் துரைஸாமி பதம்பாடியாட.

## 11 நலுங்கு

மனஸாகரக என்ற கீர்த்தனை மெட்டு.

பல்லவி.

ஸரஸ்வதியேநான் நலுங்குபாட
ஸந்ததம் வருவாய் - கமல (ஸரஸ்)

அனுபல்லவி.

வரமருளும்வாகீசுவரீ வாக்கினில்வந்து காத்தருள்தாயே(ஸர)

சரணங்கள்.

1 முல்லைரோஜா அல்லிமலர் மல்லிகைமருசெண்பகம்
அல்லும்பகல் அன்பாயுன்னை அர்ச்சனைசெய்தொழுதேன்
வெல்லுவரந்தந்தருளி மேதினிதன்னில்வெற்றிபெறவே()

2 இப்புவியில்நா னுந்தனையே இன்பமதுடன் பணிந்தேன்
பொற்பதமேதந்தருள்வாய் புஸ்தகமணிவாணியே
செப்புந்துரைஸாமிபதம் தப்பறவேசாற்றநிதம் (ஸரஸ்)

## 12 சாதா நலுங்கு.

(ஸ்ரீராமா ஜெயஜெய) என்றமெட்டு.

கண்ணிகள்.

1 மின்னொளிசேர் மதுராபுரி மீனாக்ஷி மீதினிலே
உன்னதமாய் நலுங்குரைக்க உமையைச்சதம் நமஸ்கரிக்க.

2 கல்யாண மண்டபத்தில் கண்மணியாம் மீனாக்ஷி
உல்லாசக் காக்ஷியுடன் உலகமகிழ் நலுங்கிடவே.

3 மல்லிமுல்லை மருக்கொழுந்து மணமலர்கள் முடிசூட்டி
மெல்லிமீனாள் சுந்தரர்க்கு வைபோகமாய் நலுங்கிடவே.

4 மஞ்சளுடன் குங்குமமும் மணமிகுந்த சந்தனமும்
கொஞ்சுமொழி மீனாக்ஷி கொண்டுவந்து நலுங்கிடவே.

5 தும்புரு நாரதரும் சுந்தரமாய் தேவர்களும்
அன்புடனே ஆசிகூற ஆனந்தமாய் நலுங்கிடவே.

6 அருமைதுரை ஸாமிபதம் அன்புடன்நாம்பாடிநிதம்
விருப்பமுடன் மீனாக்ஷி விதம்விதமாய் நலுங்கிடவே.

## 13 ஷ மெட்டு. வேறு.

1 நவரத்ந பாய்தனிலே நாகரீக வுண்டையுடனே
நவநவமாய் மீனாக்ஷி நலுங்கிடவே தானமர்ந்தாள்.

2 பச்சைமஞ்சள் பட்டணமஞ்சள் பாங்குடனே தானரைத்து
இச்சையுடன்மீனாக்ஷி எடுத்துஸ்வர்ணத்தட்டில்வைத்தாள்.

3 சுறுசுறுப்பாய் மீனாக்ஷி சுந்தரர்முன் எழுந்துவந்து
பறபறப்பாய் பசுமஞ்சளை பக்தியுடன் பதிக்கணிந்தாள்.

4 மாக்ஷியுடன் மீனாக்ஷி மனமகிழ்ந்து வாய்திறந்து
காக்ஷியாக கந்தம்பூச கைகள்தனை தாருமென்றாள்.

5 எந்தனுடன் வார்த்தையாட இன்னுமேனோஸங்கோஜம்
சந்தோஷமாய் நலுங்கிடவே தாருமென்றாள் திருவடியை

6 முல்லைமரு பாரிஜாதம் முகரநல்ல கொழுந்துரோஜா
மல்லிகைப்பூ செண்பகப்பூ மாப்பிளைக்கு சூட்டினாளே.

7 முத்தாலே ஆலத்தியை மூன்றுதரம் சுற்றியபகை
நெற்றியில்தம் கரமதினால் நேரில்திஷ்டி கழித்திடவே.

8 வீர்ஸமலர் பூவெடுத்து நேசமதாய் பூஜைசெய்யும்
தாஸன் துரை ஸாமிபதம் சாதுர்யமாய் பாடிடவே,

## 14 ஷ மெட்டு வேறு.

கண்ணிகள்.

1 இந்த்ராதி தேவர்முதல் இஷ்டமன்னர் வீற்றிருக்க
சுந்தரவேல் ஸுப்ரமண்யர் சுபமாக நலுங்கிடவே.

2 வெற்றிலையுங் களிப்பாக்குடன் விதவிதமாய்ப் பத்திரியும்
சுத்தயேலக்காயுடனே சுருள் கொடுத்து நலுங்கிடவே.

3 வித்தகித்தர் தவமிழைக்கும் சித்தர்முக்தர் வீற்றிருக்க
சக்தி வேலாயுதனும் சந்தோஷமாய் நலுங்கிடவே.

4 அஞ்சலிசெய் துதிநிதம் ஆறுமுகனைப் பணிந்தேற்றும்
செஞ்சொல்துரை ஸாமிபதம் சிங்காரமாய் பாடிடவே.

## 1 ஷை மெட்டு வேறு.

தண்ணிகள்.

1 ஸ்ரீராம ராமனடி • சீர்மையுள்ள பூபனடி
லக்ஷ்மீஸ மேதனடி • லாவண்ய ரூபனடி.

2 தசரத பாலனடி தர்ம்குல சீலனடி
தரணிபுகழ் மூலனடி சாந்தகுண லோலனடி.

3 நந்தகோ பாலனடி நற்குண சீலனடி
இங்கித கோலனடி சங்குசக்ர பாணியடி.

4 நவனீத சோரனடி நாயகிகள் லோலனடி
ரவிகுல சோமனடி ராதாவி லாஸனடி.

5 ஜெயஸீதா ராமனடி ஜெயவீர சூரனடி
ஜெயதுரை ஸாமிபணி ஜெபஜெப ராமனடி.

## 16 என்முகம் பார்த்தருளையா என்றமெட்டு.

பல்லவி.

காணக்கண் ணாயிரம்வேணும்— பாரில்
கண்மணிமீனாக்ஷி கமழ்நலுங்கிடுவதை—அம்பாள்கமழ் (காண)

சரணங்கள்.

1 ஆண்டவன்சுந்திரர் அருசுபமதனிலே
பாணிக்ரகணஞ்செய்த பதுமகிநியம்பாளை-திவ்யபதி (கா)
2 எத்திசையிலும்பர சித்தமாய்விளங்கிடும்
சக்திமீனாக்ஷியின் ஸம்ப்ரமவிபவத்தை-திவ்யஸம் (காண)
3 ஆவலாயஸன்னிதி மேவியதுரைஸாமி
கூவும்பதத்திற்கு ஆவியாய்நிற்பதை-அம்பாள்ஆவி (கா)

## 17 பெண்ணே ஈசன்சங்கதியை என்றமெட்டு.

கண்ணிகள்.

1 நாதரவும்மைவேண்டுகிறேன்நலுங்கிடவாரும்கிருபைசெய்து
ஏதும்பிழைகள்செய்தேனோ-ஏழைமுககண்பார்த்தருளும்.
2 சந்ததம்வந்தனம் தந்தனனே சரணமெனவே புகுந்தனனே
பந்துஜனவாசை துறந்தனனே-பாதமேகதியெனவந்தனனே
3 எட்டுமிரண்டுமறியாத ஏழையென்றும்தெரியீரோ
தொட்டிழுத்தும்மைத்துதித்தேனே
துரைஸாமி பதமதைஆதரிக்க. (நாதா)

பார்ஸி ஹிந்துஸ்தானி.

18 பஹார மேரிப்யார் ஆயீன ஸீமேபஹு என்றமெட்டு.

பல்லவி.

நன்னனுங்கிடவாரும் சுந்தரா என்னுடனே. (நன்)

சரணங்கள்.

கன்னிவயதில் என்னை மருவிய
உன்னதமென்னசொல்வேன் ஸாமி
உன்னதமென்ன சொல்வேன். (நன்)

2 வானவனேமா தென்னிடம் பேசினுல்
வாய்முத்தம்சிந்திப்போமோ ஸாமி
வாய்முத்தம் சிந்திப்போமோ. (நன்)

3 உம்மாசையினுல் நம்துரைஸாமியும்
பண்ணுதமிழ்படித்தேன் ஸாமி
பண்ணுதமிழ் படித்தேன். (நன்)

19 மாவும் பிலாவுங்கோய் யாவும்பழுத்திருக்கும் என்ற மெட்டு.

கண்ணிகள்.

1 அன்னைமீனுக்ஷி அரன்சுந்தரேசருடன்
நன்னனுங்கிட்டதை நானெவ்விதம்சொல்வேன்.

2 பச்சைமஞ்சளுடன் பற்றும்பங் காளாமஞ்சள்
இச்சையுடன்தானே எடுத்துக்க லந்துவைத்தாள்.

3 கதம்பகஸ்தூரிக் களபம்பற் பலவிதம்
கண்மணிநனுங்கிடக் கலவைகள்கூட்டிவைத்தாள்.

4 அத்தர்புனுகு அம்பர்ஜவ் வாதுஹீரான்
பக்தியுடன்பதிக்கு பாங்காயெடுத்துவைத்தாள்.

5 பற்றரைமாற்றுள்ளப் பளிங்குத்தட் டதனிலே
வெற்றிலைச்சுருள்விதம் விதங்கி ழித்துவைத்தாள்.

6 பாதுரைஸாமியும் பரமகல் யாணிமேலே
பாடினுள்பதங்களை பலரும்பு வியிற்பாட.

20 ஸ்ரீராமச்சந்திரனே என்ற மெட்டு

கண்ணிகள்.

1 துலங்குமென்னுள்ளழகா சுந்தராவென்கட்டழகா
நனுங்கிடும் என்னழகா கார் கார் கார்
ஆடுவோம் பந்தாடுவோம். (துல)

2 தொண்டராதுகுணசீலா தோகைமீனாக்ஷிலோலா
எண்டிசையோர்கநுகூலா கார் கார் கார்
நேசனே மந்த ஹாஸனே. (துல)

3 புன்னகைதன்னுள்ளமூட்டி கன்னங்கள்சுழியகாட்டி
நன்மொழிகள்தன்னையூட்டிக் கார் கார் கார்
மாரனே அலங் காரனே. (துல)

4 புத்தியுமிலாதயென்னை பக்தியில்லில்லாதயென்னை
நித்தமுந்தொழாதயெனைக் கார் கார் கார்
அஞ்சினேன் மிகக் கெஞ்சினேன். (துல)

5 பந்துவிளையாடிக்கூட பக்தன் துரைஸாமிபாட
செந்தமிழ்பதமேதேடக் கார் கார் கார்.
ஆதியே பரஞ் சோதியே. (துல)

## 21 இகையாலனே வானிதோ என்ற மெட்டு.

பல்லவி.

நலுங்கிடவே வாருமென் னாதனே வினோதனே. (நலு)

சரணங்கள்.

1 குலுங்கிடவே கோதையுடன் கூடிநாடிப் பாடியாடி (நலு).
2 அத்தர்பன்னீர் ஜவ்வாதுடன் நித்தமும்நீ ரென்னுடனே (நலு)
3 தாஸன் துரை ஸாமிபதம் நேசமாகப் பாடிநிதம். (நலு)

## 22 பாலைவாய்க்கமுகில் லெந்தூர் என்ற காவடிச்சிந்து மெட்டு,

1 சுந்தரஞ்சேர் கண்மயிலே அந்தரங்கப் பெண்மயிலே
சொந்தமாக சிந்துபாடி யாடவே
சிந்தை மகிழ்ந்து வந்துநலுங் கிடவே.

2 கெஞ்சினேனடி உன்னை நானே வஞ்சியே நிதம்இன் பந்தானே
கிஞ்சித்தேனுந் தருவாயடி மானே
சஞ்சீவி மருந்தே உன்னை நம்பினேனே.

3 சித்ரமொழி மாதரெல்லாம் நித்தமெந்தன் கிருபைதேடி
மத்தளத்தா ளத்துடனே பாடவே
தத்தி மித்ததிங் கிணதோமென்று ஆடவே.

4 செட்டியார்சிந்துமெட்டுதனைசெட்டியின்மேல்நலுங்காகவே
கட்டியதுரை ஸாமிபதம் தேடியும்
அட்டி யுண்டோ அன்புமிகப்பாடியும்.

## 22 கரும்புதின்னவுங் கைக்கூலி என்ற திருப்புகழ் மெட்டு

கண்ணிகள்.

1 நலுங்குகொண்டாட ஸந்தோஷம்
நாதனுக்குமுண்டோ ஸங்கோஜம்
குலுக்குமினுக்குப் பெண் ஸஹவாஸம்
குமாரஉண்டோ ரூபதேசம் (ஸாமி-நலுங்

2 இனியகளபமு மேல்பூச்சு
இங்கிதமானதோர் சொல்லாச்சு
கனிவாயிதழினிற் பொய்பேச்சு
கண்டுகொள்வேனோ நிஜப்பேச்சு (ஸாமி-நலு

3 இப்படிச்சொல்வது மேனையா
எந்திழையாளையும் சோதனையா
ஒப்பியமாதர்கள் போர்தனையா
ஓகோ இன்னமும் யோஜனையா. (ஸாமி-நலு)

4 பெண்களுமக்கோ பலகோடி
பேதையானபெர்தன் மனம்வாடி
கண்ணுந்துரைஸாமி பதம்பாடி
நாதன்செய்யலாமோ மிகமோடி. (ஸாமி-நலு)

---

## 23 மையலாகினேன் ராஜா என்ற மெட்டு

பல்லவி.

நலுங்கிடவாரும் ஸாமி (நலு)

அனுபல்லவி.

குலுங்கி ஆடி கூடிப்பாடி (நலு)

சரணங்கள்.

1. உடலு முயிரும் போலவே உறவு மருவத்தேடியே
உள்ளமும் நாடுதே-எந்தன்உள்ளமும் நாடுதே (குலுங்கி)

2 மாரன் கணைமீறுதே மையல் மிகநேருதே
ஆவி சோருதே-எந்தன் ஆவி சோருதே (குலுங்கி)

3 குறுக்குத்துறை வாஸனே குவலயமதி நேசனே
சிறக்கப்பாடினேன்-துரைஸாமிசிறக்க... ...ன் (குலுங்கி)

24 இவள்தானிவள்தான் இவள்தானெனக்குகந்த என்ற மெட்டு

பல்லவி.

சமயம் இதுவே சமயம்நாம் நலுங்கிட
சமயம் நற்சமயம் இதுவே. (சமய)

அனுபல்லவி

உமையவளின் னருள் உத்தமகுலதீரா
உலகெங்கும் புகழ்பெறும் உபகார அலங்காரா
துள்ளல் { உன் மனதிற்கு உகந்ததேவிநான்
உச்சிதமாக விளையாடவேதான் } (சமயம்)

சரணம்.

வாலைப்பருவமாச்சே மன்னு நீரென்னைச்சார;
மாலைப்பொழுதுமாச்சே மங்கைநானும்மைச்சேர
மேலும் மேலும் விரகம் மிஞ்சுதென்னுவிசோர
மின்னுள்யாரோடுசொல்வேன் என்மனதாவல்தீர
துள்ளல் { தொல்லுலகினில் துரைஸாமி பதம்
சொல்லுமன்பர்கள் சுகித்துவாழ்நிதம் } சமயம்

25 இந்துமுகிவானிகிமன என்றமெட்டு.

பல்லவி.

கண்மணி நாம் நலுங்கிடவே
காலம்போகுதே வீண்ஜாலமாகுதே
வீண்ஜாலமாகுதே வீண்ஜாலமாகுதே. (கண்மணி)

சரணங்கள்.

1 பொறுக்கமனங் கூடாதினி போற்றிசெய்கிறேன்
மறுக்க என்னால்வசமல்ல
மயிலேகூறுயோ என் குயிலேசேராயோ. (கண்)

2 வஞ்சமேனோ நெஞ்சிலிட்டு வாடச்செய்கிறாய்
கொஞ்சியென்னை மிஞ்சிநிதம்
கூடலாகாதோ விளையாடலாகாதோ. (கண்)

3 செஞ்சொல்துரை ஸாமி பதம்செழிக்கப்பாடினேன்
கிஞ்சித்தென்மேல் கிருபைவைத்து
கிட்டிவாராயோ கட்டிமுத்தந்தாராயோ. (கண்)

## 26 (பரமாதரை நம்பலாகாதையா) என்ற வர்ணமெட்டு.

பல்லவி

மணமங்கையே நலுங்கிடவே வாடி. (மண)

சரணங்கள்.

1 மங்கையே உனை மணந்து கூடவே
நங்கையே நான் நயந்து தேடினேன்
உன்-செங்கையினால் சேர்த்தணைந்தெனை
சங்கையின்றியே சார்ந்தென்னைநாடி. (மண)

2 ஓடி வந்தொரு முத்தந்தாடி
கோடி கோடி புண்யமுண்டடி
தேடியே துரைஸாமிபதம்
பாடியே நீ பண்புடனே. (மண)

## 27 (இந்த நந்தவனத்தின் சுந்தரம்பாரடி) என்ற மெட்டு.

1 நீலம யில்மேல்வரும் நீதிவேற் கையனே
லீலாவினோதமெய்யனே என்னையனே லீலாவினோத
புன்னகை தன்னுடன் வன்னமயிலேரி [மெய்யனே
என்னுடன்கூடி நன்னலுங்கிட (நீலமயில்)

2 ஆசைக்கி சைந்த எந்தன் நேசவிசுவாஸனே
வாஸம லர்ப்ரகாசனே ஜகதீசனே வாஸம லர்ப்ரகாசனே
தொட்டிழுத்தெந்தனை எட்டிப்பிடித்து
இட்டமதாகவே அட்டஹாஸம்செய்த (ஆசை)

3 கொஞ்சிமுத் தங்கொடுத்தும் ரஞ்சிதங் காறுமே
சஞ்சலமேனைகூறுமே துயர்தீருமே சஞ்சலமேனைகூறுமே
அன்னநடையாள் மின்னலிடையாள்
பின்னல்சடையாள் உன்னதமாக (கொஞ்சி)

4 பஞ்சணை மெத்தைமீதில் கொஞ்சியவேலனே
வஞ்சியர் புகழ்கலோலனே அநுகூலனே வஞ்சியர்புகழ்க
உற்றதுரைஸாமி முற்றுமியற்றிய [லோலனே
நற்றமிழ்பதம் சற்றுநிதம்பாடி (நீலமயில்)

---

## 28 (ஸாவர்யாமோரீ ஸங்கரங்ககே) என்ற பார்ஸீ மெட்டு.

பல்லவி

நாழிகையாச்சுதே நன்னலுங்கிட்டு நாதாப்பந்தாடுவோம். (நாழி)

சரணங்கள்.

1 தனதுமில்லையோ மனதுமில்லையோ தயவது மில்லையோசொல்
நயமது மில்லையோ சொல்
அடியாளிருக்க ஆசைதந்ததார் அந்தரெங்கம்சொல்
அடியாளறியச்சொல் அன்பில்லையோசொல்
நிஜம்சொல்—சொல்—சொல் நிஜம்சொல் சொல் சொல் (நாழி)

2 திவ்பசந்திரன் உதயம்போன்ற தேன்மொழி மாதுடன்சேர்
மேன்யேலு மென்னையேசார்
ஜகமேயெவரும் மிகவேபுகழும் திருச்செந்தூராகார்
முறையுடன் வினையைத்தீர் துரைஸாமிதமிழ்பதம்பார்
மனம் தேர்—தேர்—தேர் மனம்தேர் தேர் தேர். (நாழி)

---

## 29 (ஸரி-கக்க-கமக-ரிஸ-ரிஸா) என்ற நோட்டின் மெட்டு.

பல்லவி.

வடி—வேலன்-என்னுடன்—நலு—ங்கிட
வானவர்கள் புகழ்ந்திட, புகழ்ந்திட, புகழ்ந்திட (வடிவேலன்)

சரணங்கள்.

1 தீதில்லாத ஸோமவாரத்தில் திவ்யசந்திரிகை நேரத்தில்
ஆதிமுதலாய் ஆசையைக் காட்டி நேசம்வைத்த. (வடிவே)

2 ஹாரகெம்பீரன், அதிகுலதீரன், அழகியமாரன், என்குமரன்
தீர சூரன் சித்தநிர்மல ஜெகஉதாரன். (வடிவே)

3 ஆலமுண்ட கண்டசிவன் அரும்புதல்வன் அறுமுகன்
நீல மயூரன் நிகிலலோக ஜனப்ரதாபன். (வடிவேலன்)

4 சூலன் அனு—கூலன் உமை—பாலன் வள்ளிலோலன்
சீலன் துரைஸாமி திவ்யப்பதங்கள் தன்னைப்பாடினேன் (வ)

## 30 (பலமை கஜலோடி) என்ற இந்துஸ்தானி மெட்டு.

பல்லவி.

நீலம யில்முருகா வாரும் நித்தமும் குலுங்கிடவே (நீல)

அநுபல்லவி

மாலைப் பொழுதில் சோலைக் கருகினில்
மருமலர் கொய்கையிலே. (நீல)

சரணம்

தழுவியே கட்டினீர் விழிதனைப் போற்றினீர்
ஜடைதனில் மலர் சுற்றினீர்—ஸாமி—ஜடைதனில் மலர் சுற்றினீர்
பழகிய வர்போல குழையவே பேசினீர்
பாதிஇரவு முழுதும்-ஸாமி—பாதிஇ ரவுமுழுதும்,
ஆசையால் உம்முடன் கூசாமல் பேசினேன்
அறுமுகா வந்தென்னை யாதரிக்கவே,
தூய்யனே மெய்யனே [நீலமயில்]
துரைஸாமிபதம்பாடினேன் -ஸாமி—துரைஸாமிபதம்பாடினேன்.

## 31 (சேர என்னைத் தோடலாகுமா) என்ற மெட்டு.

பல்லவி

சுப்ரமண்யா சோதனையா சாதனையா
போதனையா (இன்னும்) வாதனையா. (சுப்ர)

சரணங்கள்.

1 திப்ரமை கொண்டுநான் தேடுமுன்னமே
சுப்ரமா யிப்போதேக ளுங்கிடவாரும்
து-லங்கவே கூறும் க-லங்கினேன் பாரும்
ஒபபாதெபோவீரேல் தப்பிதமாகும்
சொல்தப்பலாகாது சொன்னேனுனிப்போது
நங்கை யாசையில்லையா
கலுங்கிடத் தொல்லையா
வாரும் பந்தாடுவோம். (சுப்ர)

2 செந்தமி ழருள் துரை ஸாமியின் பாவே
சிந்தைது தித்திடவும் செங்கதிர்வேலா
மங்கைகள் சீலா ஸங்கீதலோலா
ஆவலாய் வந்தேன்னை ஆதரித்திடும்
சேவற்கொ டியோனே ஜெயந்திபு ரத்தோனே
சித்தங்தேருச் சிறியேன்
தேவேயுன்னைப் பிறியேன்
இஷ்டம் போலெ வெசெய் (சுப்ர)

---

32 (துரையே ஜாலம் செய்வதேன்னடா) என்ற மெட்டு.

பல்லவி

கந்தா மோடி செய்வ தேனையா ஹ ஹ
பந்துவி ளையாட

சரணங்கள்

1 சந்ததமுந்தனை சிந்தையிலெண்ணி நான்
எந்தவிதத்திலும் சொந்தமாய் நண்ணி ஹ ஹ
சுந்தரகு மாரனே

2 வல்லபைநேசா மகிழுமுல்லாஸா
அல்லல்தவிர்த்தென்னை யாள் ஜகதீசா ஹ ஹ
ஹாரகெம்பீரனே.

3 பன்னுவேலன்பேரிற் பதங்களைச்சொல்ல
உன்னுந்துரைஸாமி ஊழ்வினைவெல்ல ஹ ஹ
என் குமரேசனே.

---

33 (கைஸேஜாதுடாலாதியா) என்ற இந்துஸ்தானி மெட்டு.

கண்ணிகள்

1 ஸரஸ உல்லாஸ லோலா சரவணபவவேலா
கரமதால் நலுங்கிட கலக்கமென்னடா சீலர (ஸரஸ)

2 சாலுமெக்காலுமே நானுங் கனவிலுமறவேனே
வேலுங்கைக்கொண்டநாதா வேண்டுமென்றின்னம்வாதா ()

3 ஆசைநேசமுள்ளஸாமீ அந்தரெங்கஞ்சொல்லும் ஸாமி
தாஸன் துரைஸாமிதனனை தயவுடன்காருஞ்சொன்னேன். ()

---

## 34 இராகம் சங்கராபரணம். ஏகதாளம்.

கண்ணிகள்

1 வாடிவாடி கண்மணியே நாம்
ஜோடியாய் இருவரும் நலுங்கிடுவோம்
தேடி நிதம்நிதம் ஆடி விதம்விதம்
ஓடிவந்தேன் பார்-பார்-பார்
அடிவாடி பெண்ணேவாடி கண்ணேவாடி. (வாடிவாடி)

2. கட்டிக்கரும்பே கனிரசமே தங்கப்
பெட்டிக் கிசைந்த தவமருந்தே
திட்டமதாகவே அட்டிசொல்லாமலே
கட்டியொரு முத்தந் தா-தா-தா
அடிவாடி பெண்ணேவாடி கண்ணேவாடி. (வாடிவாடி)

3 உத்தமனறுமுகம் சக்திவேலன்றன்னை
எத்தனைவிதமெனும் துதிசெய்யும்
சுத்த நிர்மல சித்த துரைஸாமி
பக்தனுக்கருள் நீ செய்-செய்-செய்,
அடிவாடி பெண்ணேவாடி கண்ணேவாடி. (வாடிவாடி)

---

## 35 (பவன்னுத நாஹிருத) என்ற மெட்டு.

பல்லவி

சரவண பவலோலா நலுங்கிடவா (சர)

அநுபல்லவி

பரமனருளால் வந்த பன்னிருகை வடிவேலா. (சர)

சரணங்கள்

1 சித்ரமணி பந்தலிலே சின்னஞ்சிறு மாதருடன்
முத்து நகையார்களோடு முத்தங்கொடுத்துலாவி
உத்தமரென்று தேடி ஓடிவந்து மாலையிட்டேன். (சர)

2 பருவமுள்ள காதலியர் பத்தி பத்தியாகக்கூடி
அருமைதுரை ஸாமிபதம் பாடி நிதம் கொண்டாடிட
மருமலர்ப்பூப்பந்தாடி மாலைசூடி மானைநாடி. (சர)

---

## 36 (ஆயேஸையா) என்ற பார்வி மெட்டு.

1 செந்தூர் வேலா நின்னுடனே கூடிப் பூச்
செண்டுப்ப ந்தாடவே நான்
வந்தேன் உன் ஆசை கொண்டனேனே என்
கந்தா தாகந்த ணிப்பாய் நீயே
கன்னி வயதில் நானே
அன்னை யறியத் தானே
உன்னை மருவி னேனே
ஆறுமுகம் போலெக்கு யார்முகமே பார்த்திடுவார் (செந்)

2 காட்டி னிலே வேடுவராய் நீர் க
படமா னீடராய் உரு
வாட்டுங் கிழவர் வடிவாய் வளை
பூட்டுஞ் செட்டி மா திரியாய்
தந்திர ஜாலந் தேடி
மந்திர மெல்லாம் நாடி
சுந்திர மாகக் கூடி
எந்தன் துரை ஸாமிபதம் இன்பமதாய் பாடிநிதம் (செந்)

---

## 37 (ஜெகமதிற்குறைவின்றி) என்ற மெட்டு.

கண்ணிகள்

1 மாதே நீ நலுங்கிட உல்லாஸமாக மகிழ்ந்துமே வருவாயே
கோதே நீ என்மீதில் கோபஞ் செய்யாமலே கொஞ்சியே
[நலுங்கிடவா.

2. அன்னமே உன்மீதிலாசைகொண்டுநானருகினில்வந்திருகக.
ஸ்வர்ணமே நீயுமென் சுந்தரமாதரசே சுகமதாய் வரத்
[தடையேன்

3 ப்ரணவப்பொருளைப்பி தாவுக்குபதேசித்த ப்ருமத்தை அ
[னுதினமும்
சரணமென்றடிதொழும் துரைஸாமி பதம்பாட ஸாரஸமாய்
[வருவாயடி.

### 38 (விடமுசாயவே) என்ற கீர்த்தனை மெட்டு.

பல்லவி.

நந்தவனந்தனில் நீரும் நலுங்கிடவாரும் (நந்த)

அநுபல்லவி.

சிந்தைதளரா செல்வக்குமரா
தினமுஞ்சேர்ந்து மனமும் மகிழ்ந்து. (நந்த)

சரணம்,

சந்த்ரவதனு ஸர்ஜனரக்ஷா ஸமயமிதுவே நலுங்கிடவே
மந்தஹாஸா யிந்தநிலவில் வந்துவந்து
வந்துபார்க்க விழியும்பூக்க வாதுசெய்வது தருமோசமயம்
சொந்தநேசாநீர் தயவுசெய்து
விந்தை துரைஸாமி பதமேபாடி. (நந்த)

---

### 39. (இத்தினைகோபமாகுமீா) என்ற மெட்டு

பல்லவி.

இன்னமுந் தயவில்லையா (இன்னமும்)

அநுபல்லவி.

ஷண்முகா நீரென்னுடனே ஸந்தோஷமாய் நலுங்கிட (இன்)

சரணங்கள்.

1 எத்தனை நாளாகவோ சித்தமுந்தன் மீதிற்வைத்து
நித்தமுனைச் சற்றுகிலும் பற்றியணைந்துகூட
வெற்றிவேலணியுஞ் சீலா உற்றதுணை வேறில்லை. (இன்)

2 அல்லும் பகலுமெந்தன் அறிவினிற் குடியிருக்கும்
புள்ளிமயில்வேலா உன்னை பூஜையனுதினஞ் செய்தேன்
உள்ளமதிற் கள்ளம்வேண்டாம் உற்றதுரை ஸாமிக்குமே.

### 40. (வந்தனம் தந்தேன்) என்ற மெட்டே.

பல்லவி.

நலுங்கிடவாரும நாதா நலுங்கிடவாரும்.

அநுபல்லவி.

நலுங்கிட நீர்வாரும்நாதா நங்கைவள்ளியுடனே
நாதனே போதனே ஞாலத்தோர் பணிபாதனே (நலு)

சரணங்கள்.

1 சண்பகம் பன்னீர் மகிழ்தாழை ஸம்பங்கி
வெண்டாமரைப் புஷ்பப்பந்து வேடிக்கையாக கட்டியே
வேலனே லோலனே வேண்டியோர்க் கனுகூலனே (நலு)

2 கதம்பபுஷ்பங்கள் பந்து கட்டியாடவே
விதவிதமாய் துரைஸாமியுன் விரும்பி நலுங்குபாடவே
வீரனே சூரனே வேரறுத்திடுந்திரனே. (நலு)

---

## 41 இராகம் அடாணு ரூபக தாளம்.

பல்லவி

சித்ரமுத்துரத்ந மாலையிட்ட மணவாளா—நின்
சித்தம்மகிழ்ந்து நலுங்கிடவாருங் கண்ணாளா. (சித்ர)

அநுபல்லவி

குற்றமனைத்துங் குணங்கொள்ளும் லோலா
(துள்ளல்) { கோலாகல-வேலா அநு
கூலாகுண-சீலா நிதம், } (சித்ர)

சரணம்

சந்த்ரபிம்பத்தைப் பழித்திடும் வதனமாது சொல்லும்
விந்தைமொழிதன்னை கேட்டருளுமிப்போது
சுந்த்ரமதன்கணைவந்து தாவுதே எந்தன்மீது உந்தன்
சிந்தைதனிலின்னம் ஏதுக்கோ இவ்விதவாது
கந்தஸாமிதன்னைச் சொந்தமாய்ப் போற்றிடும்
(துள்ளல்) { எந்தன் துரை-ஸாமிபதம்
சிந்தைமகிழ்ந்-தாடிப்பாடி } (சித்ர)

---

இராகம் ஆனந்தபைரவி. ரூபக-தாளம்.

## 42 (விரஸமான வார்த்தைவேண்டாம்) என்ற மெட்டு.

பல்லவி.

மாமயில்வேலா நலுங்கிட வாருமென்னுடன். (மா)

சரணங்கள்

1 க்ஷேமமுடன் அனுதினமும் நின்னை நாடியே
ஜாமமாக நானழைந்தேன் ஜாலம் செய்யாமல். (மாம)

2 பரிமளவாஸம் கமகமென் பனினீர் வீசவே
அரிவையுடன் அகமகிழ்ந்து ஆதரிக்க நீர். (மாம)

3 வெற்றிசேர் துரை ஸாமிபதம் விரும்பிப் பாடினேன்
சற்றுந் தயை என்மேல்வைத்து ஸரஸமாடவே. (மாம)

## 43. (ஸாரஸஸமமுக பரமமமா) என்ற மெட்டு.

பல்லவி.

சுந்தரா நலுங்கிடத் தாமதமேன்
(என்னை) தொட்டுத்தாலி கட்டிபபின் (சுந்த)

சரணம்.

1 மந்தகாஸவதன மதுராபுரீசரே
சுந்தரரூபியாய் சந்ததமென்னுடன் (சுந்த)

2 பூவகம்தன்னிலே யாவரும்போற்றியே
தேவர்கள் துதிக்கும் திவ்யப்பிரகாசா (சுந்த)

3 மறைபுகழ்மீனாக்ஷி மனோன்மணிக்காக்ஷி
துரைஸாமிநற்றமிழ் அரும்பதம்மாக்ஷியே (சுந்த)

## பூப்பந்தாடல்.

## 44. (பித்தா பிறைசூடி) என்ற தேவார மெட்டு.

கண்ணிகள்.

1 பந்தாடுவோம் சுந்தராவென் பதியேஇதுஸமயம்
செந்தாமரை மலர்பாதாநாம் சிந்தைமகிழ்ந்துன்ன
வந்தால்தினம் தந்தால்காக்ஷி மருவிமுத்தந்தருவேன்
ஐந்தாமுயிர் ஆகாவண்ணம் அடியாள்பணிந்திடுவேன் (பந்)

2 நினைக்கவுன்னை நினைக்கவெந்தன் நெஞ்சமெல்லாம்ருசிக்கும்
நினைப்புகழ வெந்தன்நாவு நித்யாமிருதம் புசிக்கும்
கனவிலும்நின் அடிகாணவே கண்கள்நித்தம் பசிக்கும்
கணவாவுன்னைப் பார்க்கவெந்தன் கவலையெல்லாம்நசிக்கும்.

3 பிறந்ததின முதலாய்நானும் பிரியமுந்தன்மேல் வைத்தேன்
சிறந்ததுரை ஸாமிபாவில் சிந்தையாவும் வைத்தேன்
நிரந்தரமாய் நின்னைநாடி நிதமும்மனம் ஒத்தேன்
பாந்தவுந்தன் முகதளிதக்காண பாரில்பர தவித்தேனே.(பங்)

---

**45. (கல்லார்க்கும் கற்றவர்க்கும்) என்ற தேவார மெட்டு.**

1 நாதாநின் திருவுளமும் யாதோநா னறியேனே
நன்மலரெடுத்தும்மை நான்பூசை செய்தேனே

2 வாதனை செய்யாமலே வந்தருள்வீர் ஐயனே
சோதனை யேனோ இன்னும் சுந்தர ரஞ்சிதனே

3 வந்தனம் புரிந்தேன்வுமை சிந்தை மகிழ்பெறவே
சொந்தமாகிய வுந்தன் சுந்தரிநா னல்லவோ

4 மாதவ துரைஸாமி மனதுகளிப் புறவே
பாதம் பணிந்தேனிதோ பக்ஷமுடன் காருமே.

---

**46. (சம்போஹரா கங்காதரா சந்த்ரசேகரா) என்ற மெட்டு.**

கண்ணிகள்

1 ஆதியான ஜோதிரூபா ஆறிருகையா
ஜாதிமலர் செண்டுபந்து ஆடுமென்மெய்யா

2 சந்ததமும் பந்துவிளை யாடும் சுந்தரா
சிந்தைமகிழ்ந் தென்னுடனே சேருஞ்சந்திரா

3. திவ்யசந்த்ரன் போற்றுலங்கும் செந்தூர்வாஸனே
பவ்யமாக என்னையாளும் பரமநேசனே.

4 ஷண்முகனே என்னுடைய ஸரஸநாதனே
கண்மணியே காருமென்னை கந்தநாதனே.

5 ஆசையுடன் நின்னுடனே அடியாள்கூடவே
நேசதுரை ஸாமிபதம் நிதமும்பாடவே.

## 47. (ஸைய்யாரே ஹாமாரேகு) என்ற பார்ஸி மெட்டு.

கண்ணிகள்.

1 பந்தாடுமென்னுடனே பந்தாடும் ஐயனே
செண்டுமல் லீகட்டி
கொண்டுமனமகிழ்ந்து பந்துகள் ஆடுவோம் (பந்தாடு)

2 வெண்மலர் பூப்பந்து
விதம் விதம் கட்டியே
பண்புடன் பாரினில் பந்துகள் ஆடுவோம் (பந்தாடு)

3 கதிர்பச்சை மலர்பச்சை
கதம்பங்கள் கட்டியே
துரைஸாமியின் பதம்பாடி யாடுவோம் (பந்தாடு)

## 48. (பூமிமேச்சிடும்) என்ற சாவடிச்சிந்து மெட்டு

கண்ணிகள்.

1 ஆசைக்கிசைந்தவனே பாசத்துடன்மணந்த வேலனே
வடி வேலனே யுமைபாலனே இப்போ
வீசிப்பந்தாடவே யோஜனையானதேன்
சீலனே அநு கூலனே.

2 அன்னைதந்தையாசை தன்னைமறக்கச்செய்த நேசனே
விசு வாஸனே மந்த ஹாஸனே இப்போ
என்னைமருவிநிதம் உன்னதப்பந்தாடும்
ஈசனே மன வாஸனே.

3 நத்தியென்கரத்தை பத்தியேமுத்தமிட்ட மாரனே
கம் பீரனே அலங் காரனே இப்போ
சித்தம்களிந்துவந்து நித்தமும்பந்தாடும்
வீரனே அதி சூரனே.

4 விரைவாகப்பந்தாடும் முறைபிறழாமலே தேடியே
விளை யாடியே என்னை நாடியே உற்ற
மறையோர்கள்மேவிய துரைஸாமியின்பதம்
பாடியே மலர் சூடியே.

இராகம்—காம்போதி தாளம்-ஆதி.

## 49 (என்னைநீர் கைவிடில்) என்ற மெட்டு.

பல்லவி.

என்றுதான்நீ வருவாய் சுந்தராப் பந்தாட (என்)

அநுபல்லவி.

இன்றுநாளையென்றால் இல்லையென்றெண்ணவோ (என்)

சரணங்கள்.

1 தஞ்சமென் றுனையே கெஞ்சிமனம்நாட
கொஞ்சிவிளையாடி ரஞ்சிதம் கொண்டாட (என்)

2 உன்னையன்றி தெய்வம் பின்னைவேறுளதோ
என்னை ரக்ஷித்துன்கை தன்னில்கொண்டருள (என்)

3 தொண்டன் துரைஸாமி தொடுக்கும் பதம்பாடி
எண்டிசையும்போற்ற ஏழைமனம் பூர்க்க. (என்)

---

## 50. (வந்தவேளையிது நல்லவேளை) என்ற மெட்டு.

1 பந்துவிளையாடுஞ் செந்தூர்வாஸா இப்போ
வந்தென்னைக் கொஞ்சிடும் மந்தஹாஸா
அந்தணர்போற்றிடுங் குமரேசா இதோ
வந்தனம்செய்கிறேன் மாதுநேசா (பந்து)

2 கன்னல்மொழிமாதை உன்னதமாய் ஸாமி
கட்டிய ணையவாரும் இஷ்டமதாய்
கன்னத்திலோர்முத்தம் தந்திடுவாய் நானும்
முன்னமே செய்தவப் புண்ணியமாய் (பந்து)

3 தப்பிதமேதேனுஞ் செய்ததுண்டோ எனக்
கிப்போதேசெப்பிடும்வி ருப்பமதாய்
செப்படிவித்தைகள் செய்வாருண்டோ நம்
விப்ரன்துரைஸாமி பதப்பாடியே. (பந்து)

—(X)—

51. (சிங்காரச்சோலை யலங்காரம்) என்ற மெட்டு.

பந்தாடவாரு முமைப் புணிந்தேன்
பலகாலு மும்மைகமல ரணிந்தேன்
சிந்தையில் அநுதினமும் நுணிந்தேன்
சிங்கார மாகஉமை மணந்தேன்
தந்தை தாயையும் சினந்தேன்
தவரெல்லாம் நிதம் தணிந்தேன்
மனமிகவே கனிந்தேன்
மங்களம் புனைந்தேன்
உரைக்கும் குனிந்தேன்
துரைஸாமி பதமேசெப்பத் துணிந்தேன். (பந்)

—(:)—(:)—

52. (மாயாகாணிமோஸமிப்புடு) என்ற மெட்டு.

பல்லவி.

சென்டாடுவோம் செல்வக்குமரா சீக்கிரமாகவே

அநுபல்லவி

கொண்டாடவாரும் கோதையாளுடனே
வண்டாடுமணமலர் மணைதனில்க்கூடி (சென்)

சரணங்கள்

1 ஞாலம்புகழ ஜாலஞ்செய்வது ஞாயமதுதானோ
ஆலமுண்ட கண்டசிவன் தந்த
கோலக்குமராக் கூடிநீ என்னுடன் (சென்)

2 உன்னைவிடுவேன் யென்றெண்ணாதே உத்தமகுணசீலா
இன்னமூந்தயவு ஸன்னமுமில்லையா
மன்னன் துரைஸாமி மகிழ்பதமபாடியும். (சென்)

—()—()—

இராகம்-தீரசங்கராபரணம்-ஆதிதாளம்.

## 53. (இங்கிலீஷ்நோட்) மெட்டு.

கண்ணிகள்

1 பந்தாடிடவே { பியூடிபல் லேடிஸ் / Beautiful Ladies } சுற்றிட்டி
புந்திமகிழ்ந்திட கந்தமலர்சூடி
புள்ளிமயில்வேலனை வள்ளியுடன் (பந்தாடி)

2 மங்கைதெய்வானையை மணஞ்செய்த நித்யசிங்காரன்
இங்கிதமாகவே சங்கீதம்பாடவே
ஈசன்குமரனுடன் னேசமதாய் (பந்தாடி)

3 மருவுடன் சங்பங்கி மலர்ந்தரோஜாசெண்டுகட்டி
அறுமுகதுரைஸாமி அருமைப்பதம்பாடி
ஆடிடவே பந்தாடிடவே. (பந்தாடி)

---

## 54 (வந்தனந் தந்தேன்) என்ற மெட்டு.

பல்லவி.

செண்டாடவேவா பூச் செண்டாட நீவா. (செண்)

சரணங்கள்.

1 எண்டிசையுள்ளோர்போற்றிடுமெங்கள்ஈசனுக்குபதேசனே
வா-வா-வா-வா-செண்டாட பந்தாட
செண்டுகள்கட்டிப்பந்தாட (செண்)

2 மல்லிகை முல்லை மருக்கொழுந்து மணமிகுந்த செண்பகம்
அல்-லி-ம-லர் கொண்டுநீ கொய்துநீ
குண்டுப்பூமலர்கட்டியே. (செண்)

3 சித்ரமயிலேறிய வெகுகள் செல்வனையனுதினம்
பக்-தி-செய்-து-பாடினேன் பாடினேன்
பாடினேன் துரை ஸாமிபதம். (செண்)

55. (ஆயிலோஸமை தோரீமந்திருவா) என்ற மெட்டு.

பல்லவி.

சுந்தரேசர் பந்தாடுவோம் வாரும் (சுந்த

அநுபல்லவி.

சிந்தனைகளேனுமக்கு தேன்மொழியாள் காணிருக்க (சுந்)

சரணங்கள்.

1 நாடுவோம் கூடுவோம் நலுங்கிட்டுப் பாடுவோம்
தேடுவோம் ஆடுவோம் செண்டுமலர் சூடுவோம் (சுந்த)

2 சித்திரை உத்ஸவத்தில் சிறப்புடனேமன மகிழ்ச்சியாம்
நித்திரையிலும் தித்திக்கும் நின் துரைஸாமி சொற்பதமாம்.

---

இராகம்—குந்தளவராளி ஆதிதாளம்.

56. (சரசர சம்மரீ இகசூரா) என்ற கீர்த்தனை மெட்டு.

பல்லவி.

வாஸமலர் தந்தாட வாரும் வேலா
வாஸவ நேசானுகூலா (வாஸமலர்)

அநுபல்லவி.

பாசமதாய் நானும் பதமலர்தேடி
பசுமஞ்சள் நலுங்கிட்டுப் பாடி யாட (வாஸமலர்)

சரணம்

கருணைகூருயோ கவலையைத் தீராயோ
தருணம் இதுவே தயை செய்வாய்
மருமலர் நறுமலர் மணமலர் செண்டாட
அருந்தமிழ் துரைஸாமி பதமந்தப்பாட (வாஸமலர்)

---

57. (நல்லநாளடா ஸாமி) என்ற மெட்டு.

பல்லவி.

வாரும் பந்தாட ஸாமீ (வாரும்)

சரணங்கள்

1 ஆறிரண்டு கரமுடைய ஐயவடிவேலவரே
ஈரிரண்டுந தெரியாத ஏழை யென்னுடன் (வாரும்)

2 சந்தம்பன்னீர் ஜவ்வாதுடன்
சாந்து மஞ்சள் குங்குமமொடு
வந்தனந்தந்து கொஞ்சுமென்னுடன்
வாதுசெய்யாமலே (வாரும்)

3 கந்தனேநின் பதந்தேடி காத்துநிதந் துதிபாட
செந்தமிழ்துரைஸாமிபதம் செவியிற்கொள்வோனே (வா)

## 58. இராகம்-சங்கராபரணம் ஆதி-தாளம்.

பல்லவி

பந்தாடவாரும் பாவையைக் காரும் (பந்தா)

சரணங்கள்

1 கந்தனே ஏனிந்தவஞ்சம் கலக்கமேனோ உம்நெஞ்சம்
காதலைத்தீர்த்திடுங்கொஞ்சம் கண்மணியே நான்தஞ்சம்(ப)
2 பலவித மலர்களைச்சொரிய பரிமளவாஸமுடன் தெரிய
குலாவிமருவமனந்திரிய கூடி இன்பஸுகமரிய (பந்தா)
3 நிறைமுடிதனில்மலர்சூடி நித்தமுமென்னையேநாடி
துரைஸாமி சொற்பதம்பாடி சுக்ருதமாக விளையாடி. (பந்)

## இராகம்-காம்போதி ஆதி-தாளம்.

## 59. (மரிதே மருவிடவா) என்ற மெட்டு.

பல்லவி.

சித்தம் மகிழ்ந்திடவே மிக
உத்தமியெனனுடனே நித்தமும் பந்தாடி (சித்தம்)

சரணங்கள்.

1 அத்தனருள்பெற்ற சுத்தனேயென்ஸாமி
இத்தருணமேவந்து முக்திக்கு வித்தாகி (சித்தம்)
2 சிந்தாகுலந்தவிர்த்து பந்தாட்டமதில்சற்று
சந்தோஷமாகவேநாம் ஸத்தியந் தனையுற்று (சித்தம்)
3 நேசன்துரை ஸாமிபதம் தோஷமேதிருப்பினும்
வாஸமலராகக்கொண்டு மானிலம்புகழ்பெற (சித்தம்)

## 60 (ஆரண்யத்தி லோரரசன்) என்ற இந்திரஸபா மெட்டு.

கண்ணிகள்.

1 வாடாயென்கண் மணியேஉனை கூடிப்பந்தாட
தேடாவிட மெல்லாந்தேடி ஓடியலைந்தேன் (வாடா)

2 அன்பாயுன்னை யணையவெனக் காசை பாகுதே
அண்டிவந்தேன் தொண்டுசெய்து அடியாள் நானுமே (வா)

3 கருணாகரா காதல்தீர கடைக்கண் பாருமே
சரணாகதி யென்றடைந்தேன் சார்வ பௌமனே (வாடா)

4 விப்ரன் துரை ஸாமிபதம் தப்பில் லாமலே
சுப்ரமதாய் சுருதியுடனே ஜொலிக்க பாடவே. (வாடா)

## 61. (வாசலிது வாசலிது) என்ற மெட்டு.

1 நித்தியமும் நானுந்தனை முத்திபெற போற்றிசெய்து
பக்திதனைமறவாமல் பந்தாடவே நானழைத்தேன் (நித்)

2 அழகிய மாரனென அணையக்கா லமீதென
பழகிய நேசனைப்போல் பற்றிக்கைகள் தொற்றினனே. (நி)

3 அப்பயமென்ற பின்னுமே அவமதித்திடலாமோ
உபயபாதந்துதித்தேன் உந்தனருள்கைகூடவே. (நித்தி)

4. பூமகள் அருள்பெறும் புண்ணியன்துரைஸாமியும்
கோமங்கை களுக்காக கூறினான் தமிழ்பதமே. (நித்தி)

—)(÷)(—

இம்-பரசு-ஆதிதாளம்.

## 62 (தேவாதிதேவபல ஜீவாதி காரணவுன்) என்ற மெட்டு.

பல்லவி

சித்தமிரங்கியேநீர் நித்தம்மனமகிழ்ந்து
செண்டுப்பந் தாடவாரும் ஸாமி (சித்)

அநுபல்லவி

இத்தரை மீதினிலே என்குல தெய்வமே
இன்னம்மன மில்லாததேன் (சித்)

5

சரணம்.

மலரடி பணிந்தேன் மணமாலையணிந்தேன்
மங்கைக்கு மாயவிந்தை காட்டலாமோ
நலம்பெறக் குனிந்தேன் நாயகிதுணிந்தேன்
நாதா என்னுடன் வாதுகூட்டலாமோ
கலையுணர் துரைஸாமி கருதும்பதம் பாடியே
காலமதை கழிக்கவே. (சித்)

---

63 (பாசுபதம் போலேமதன் பாணம்தைக்குதடி) என்ற மெட்டு.

1 சுத்தமலர் பந்துகட்டி பத்தியாடிஞண்டி
கிட்டி யருகே நாடிஞண்டி
சுற்றிச்சுற்றியே சுத்தியெந்தனை முத்தமாடிஞண்டி
(செஞ்) சுருட்டி பாடிஞண்டி.

2 ஆசைப்ரா ணேசனடி யார்க்கும் ராஜனடி
(என்) மனதில் வாஸனடி
நேசமாகவே எந்தன்மனதில் நிகழும் ப்ரகாசனடி
(என) தாசைபாசனடி

3 சுப்ரஹும் எந்தனிட சுகுணநேயனடி
(மனங்) துலக்கும் புண்யனடி
விப்ரன் துரைஸாமிபதம் விரும்புங்கண்யனடி
(புகழ்) நிறப்பும் தன்யனடி.

---

இம்—பியாக்—ஆதிதாளம்.

64 (திர்த்ரு தானீம் தீம்தீம் தத்திரஞ) என்ற தில்லாஞ மெட்டு.

பல்லவி

செண்டாடவே வாரும் ஷண்முகா நீர் (செண்)

சரணங்கள்

1 குண்டும லர்ப்பந்து சுண்டிநா மாடி
கொண்டா டிடவே நாம் கொண்டா டிடவே (செண்)

2 தஞ்சமென் றேயுனை நெஞ்சு மெனக்கு
நெஞ்சந் துலங்கிடவே நெஞ்சம் துலங்கிட (செண்)

3 பக்தன்து ரைஸாமி பண்பதம் பாட
முக்திதந் தருள்வாய் முக்திதந்தருள் (செண்)

---

இராகம்—சங்கராபரணம்-ஏக-தாளம்.

**65** (எங்கள் அருமை மகராணி) என்ற நோட்டின் வர்ணமெட்டு.

(இங்கிலீஷும் தமிழும்.)

கண்ணிகள்

1 வந்தனந் தந்தேன் { மை-லேடி / My-Lady } பந்தாடவாநீ எனைத்தேடி

{ இன்-திஸ்-மூன் எம்ப்ரேஸ்-மீ / In this moon embrace me } என்னுடன் விளையாடிக் கூடவேநீ (வந்த)

2 { பில்லவ்ட் லேடி-கிஸ்-மீ-நவ் / Beloved lady kiss me now } { பலவிதவாஸ மலருடன் } { யூ / you }

{ ஹல்லோ-டியர்-கம்-நியா-மீ / Hallo dear come near me. } { அழகிய சேல் விழிமாதே நீ } (வந்த)

3 { ஜாலி-ப்ரண்ட்-ஐ-யாம் / Jolly friend I am } காத்திருக்க தயவுசெய்வாய் [சுகித்திருக்க

{ காலிங் யூ / Calling you } கண்மணியே கடுகியே வாடி பந்தாடவே (வந்த)

4 { வாஸவன் பணிதுரை ஸாமிபதம் நேசமாய் } { வீ ஷல் ஸிங் / We shall sing } நிதம்

{ பீ ஹாப்பி / Be happy } { பெண் மணியே } { பி-கன்டென்ட்-வித்-வாட் / Be content with what- } { யூ-ஹாவ் / you have } (வந்தனம்)

இம்-ஆரபி-ஆதிதாளம்.

**66** (பூசுவதும் வெண்ணீறு என்ற தேவாரமெட்டு.)

1 செண்டாடுவோம் பந்துகட்டி சிந்தைமகிழ்ந் திருவருமாய்
சிறந்தமணை மீதினிலே ஜெகம்புகழச்சிங்காரமாய்
கண்டுபலர் களித்திடவும் கண்காக்ஷித்தோற்றமதாய்
கருணையுறத்தருணமிது காதலனே கண்பாரும்.

2 அன்னையும்நீ அப்பனும்நீ ஆவியும்நீ உடலும்நீ
ஆசார்யன் கடவுள்நீ யாவும்நீயே இத்தரையில்
முன்னும்நீ பின்னும்நீ முக்தியும்நீ சித்தியும்நீ
மூலாதி காரணமுள்மூர்த்தியும்நீ யான்பணியும்.

3 பாடுகவி கற்பனையாய் பாரில்துரைசாமி மனன்
பக்தியுடன் பதமியற்றி பரவிடவே பதிப்பித்து
நாடெங்கும் நவிலவுமே நற்றவநம் பயனாலே
நாதா இது ஞாயமதை நன்குணறும் ஸத்தியமே.

## 67 (படுவாருந்தன தேரேமி ஜாஜாரு) என்ற மெட்டு.

1 குமராவுந்தனைக் கொண்டாடு மடியாள்
குமரா வுந்தனையே
கமலம்பந்தாடவே கருதிநா னழைத்தேன்
குமராவுந்தனையே—ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ. (குமரா)

2 நெஞ்சந்துலங்கவே தஞ்சமென்றடைந்தேன்
அஞ்சலி செய்துனையே
கொஞ்சிமருவிட ரஞ்சிதமாக நான்
குமராவுந்தனையே—ஆ...............ஆ. (குமரா)

3 ஆதிமுதலாக அண்டினேன்சற்றும்
அறியாதுளதோ நீர்
மூதுரை ஸாமியும் முற்றிலும் பாடினான்
முருகா வுந்தனையே—ஆ...................ஆ. (குமரா)

## 68 (பலமகஜலோட்டி) என்ற பார்ஸீ மெட்டு.

பல்லவி.

ஜாலமே சற்றநாதர்வுந்தன்
சீலமு மறிகிலேனே. (ஜாலமே)

அநுபல்லவி

ஞாலமீதில் நாயகிக்கெல்லாம்
நாயகன் உமைப்போலுண்டோ. (ஜாலமே)

சரணங்கள்.

1 ஸதிகளுடனே ஸரஸமின்றியே
ஸாகஸம் செய்வாருண்டோ—ஸாமி, ஸா......டோ
பதியே கதியென்று பயந்து நான்நடந்தும்
பயித்தியக்காரி யாக்கினீர்—ஸாமி, பயி......னீர்
இன்னமும் ஸகித்தேன் சொன்னயம் வகித்தேன்
பின்னமில்லாமலே பேதையைக்காரும்
நாதனே ஞாயம்சொல். (ஜாலமே)

2 அல்லும்பகலும் தில்லும் புல்லுஞ்சொல்லி
அடியாளை வஞ்சனைசெய்தீர்—ஸாமி, அடி......தீர்
உள்ளம் வல்லிரும்போ சொல்மொழி கரும்போ
ஓகோகோ உம்மைநான் விடேன்—ஸாமி, ஒ...டேன்
விப்ரன் துரைஸாமி வெல்லும்தமிழை
சுப்ரமாய்ப்பாடியே சுந்தரமாக
என்னையே கைக்கொள்ளும். (ஜாலமே)

---

## 69. பத்தியம்—(பெண்.)

கெட்டிமெத்தை வீடுகளும் கிணறுகுழாய் பம்புகளும்
கட்டடமும் நாகரீக மாகவேணும்,
கொட்டிலும் பசுக்களும் குதிரையுடன் கோச்சுவண்டி
திட்டமாய் வேலையாள் இருக்கவேணும்,
சட்டமாய் குண்டூர்நெல் சன்னசிறு மணியனும்
பட்டயமாய் விளைநிலம் இருக்கவேணும்,
கட்டநெற்களஞ்சியமும் கண்ணியமாய் பங்களாவும்
இட்டமுடன் நந்தவனம் இருக்கவேணும்,
பட்டுபீதாம்பரங்கள் பனாரீஸ்பவுன் புட்டா
கொட்டடி வுடையரையில் வுடுத்தவேணும்,
புட்டாககள் ஜண்டிவைத்த பட்டுமக மல்ரவிக்கை
திட்டமாய் தெய்த்துமேல் துலங்கவேணும்,
கட்டுவை ரத்தோடு தட்டுச்சங் கிலிமாட்டல்
பட்டைச்சிகப் பட்டியல்பவுன் மாலைவேணும்,

கெட்டிக்காப்புடன் கொலுசு பட்டைபம் பாய்வளையல்
திட்டமாய் எஸ் வளையல் செய்யவேணும்,
அட்டியில்லாமலே இடையிலொட் யாணமும்
வட்டமாய் நாகஒத்தும் வாங்கவேணும,
கெட்டுப்போகமலே கட்டுவைர முலாக்கு
பட்டைச்சி கப்புமூக் குத்திவேணும்,
பெட்டியிற் பணம்வைத்து கெட்டியாய் பூட்டியே
சட்டமாய் என்கையில் சாவிவேணும்,
பெற்ரேலியம் மோட்டாரில் பிறந்தகம் போகவே
பிரியாமல் கணவனும் வரவும்வேணும்,

முடுகு

சட்டமாய் விளையாட ஸகிகள்வேணும்,
இஷ்டமாய் கணவனும் இழையவேணும்
கட்டியே இருவரும் மகிழவேணும்,
அட்டியின்றியே அகமுடையானும்
அடங்கி இருக்கவேணும்.

---

## 70. (ஆண்)

தண்கொண்ட கலைமோ ஜயங்கொண்ட சந்தானே
மண்டலம்பால் நிகரில்லா மாதுமுகமோ,
கண்கள் பத்மங்களோ காரிருள் கூந்தலோ
கண்டோரை மயக்குகின்ற மொழிகளோதான்,
வெண்முத்துக் கோர்வையோ நல்முத்துச்சேர்வையோ
உன்னிதழ் மந்தஹாஸபல் வரிசையோதான்,
பண்புடன் பிரகாசிக்கும் பளிங்குக்கிண்ணங்களோ
தண்மிகும் சூடங்களோ ஸ்தனங்களோதான்,

முடுகு.

இந்தசுபவேளையிற் கிடைக்குமென்தன் பாக்கியமோதான்
எந்தன் குலதெய்வமேதந்த வரிசையோதான்
முன் தவப்பயனூற்ற மங்கையோதான் (தான்.
இந்தையின்றியேயென் கைபிடித்திருக்கும் மங்கைஇவள்

---

## 71 (பெண்.)

நெற்றியிற் பொட்டேது நீலக்கண் சிகப்பேது
மாற்றிய வஸ்திரமெல்லாம் மஞ்சளேதீ,
மெத்தவும்கிள்ளுகள் மேலெல்லாமேதேது
நித்திரைமயக்கமோ நினைவுவேறே,
உற்றதோர்காமமோ உகந்ததோர் சண்டையோ
இத்தனை ஆயாஸ மேதுஸாமி,
சித்தமும் சித்ரவே சோரனையகிமருந்து
இட்டவளாரையா எனக்குச்சொல்லும்,

முடுகு.

ஆதிலீலைமோகனே ஆறுமுகவேலா
பார்வதீ புத்திரனே பன்னிருகைபாலா
வள்ளிதெய்வானை மருகும்லோலா
சுப்ரமண்யபூபால சுகுண சீலா.

---

## 72 ஆண்.

எங்கே நீ சென்றயோ என் பிராணநாயகி
என்மீதில் கோபமோ ஏதுமறியேன்,
அங்கஜன் வாதையால் அலைகிறேன் நிதம்நிதம்
சங்கையில்லாமலே ஸரஸமாட,
மங்கைஸ்திரீ ரத்னமே மதனபிஷேகமே
மங்களமாய் வார்த்தைசொல் மனதுதேற,
திங்களும் தனலாகத்தூவுறன் என்மேலே
சங்கைபட மனம்வாடல் ஸாத்யமாமோ,

முடுகு.

வர்ணமெத்தையின்கண் விளையாட வாடி வாடி,
மனதிலிதுவென்ன வர்மமோடி,
மோடியேன் செய்கிறாய் மோகனாங்கி,
ஓடிவந்து ஒருமுத்தம் தாடி.

## 73 (பெண்)

பூலோக இந்திரனே பூரணசந்திரனே
மாலானுமருகனே மணமருகனேதரன்,
தசரதகுமாரனே தர்மசுவரூபனே
வசிகரமெய்யனே வஜ்ரதரனே,
ஜீவபரிபாலனே ஸ்திரீகளநுகூலனே
சிவசுப்ரமண்யனே செல்வமுகனே,
நீதிப்ரகாசனே நீநில்த்தலைவனே
காதலன் இவர்பெருமை கருதவசமோ.

முடுகு.

காணவே என்மனது காதல் கொளவே,
கந்தமலர்முடிசூடி கலந்துமகிழ,
கான்மருவி இதுவேளை நன்மைபெறவே,
நானுசைகொண்ட ப்ராணேசரிவரே.

---

## 74 (ஆண்.)

மங்கள ஸ்வரூபியே மகிழ்தரும் தேவியே
எந்தனுட ஆவியே இளங்குயிலே,
மங்கையர் திலகமே மாணிக்கச் சுடரொளியே
மனதினிற் கிசைந்ததொரு மடமைமயிலே,
எங்கள்குல தீபமே ஸ்ரீங்கார ரூபியே
என்சிந்தைமகிழ் தரவந்த பெண்களரசே,
திங்கள்முக விலாஸமே பங்கமலர் கோதையே
சங்கைநீ படவேண்டாம் ஸரஸநேத்ரீ,

முடுகு.

மலரும் மணமும்போல மாதே நாமும்
மானிலத்தில் வாழ்ந்திடலாம் மகிழ்ச்சியாக
ஏதும் குறைவின்றி நம்மை ஈசன் காப்பார்
எண்ணுதே பலவிதம் இன்ப நிதியே.

---

## 75 (பெண்)

பலகாலம் தவஞ்செய்து பத்மலோசனனே வுமது
பாதமலர் ஸேவைக்குக் காத்திருந்தேன்,
குலந்தன்னில் சிறந்ததொரு குணவந்தர் தாமென்று
குதூஹலத் துடனேநான்மாலையிட்டேன்,
பலபேருங் கொண்டாடும் பாக்கியவானென்றும்மை
பாவை நானகமகிழ்ந்து கைப்பிடித்தேன்,
விலக்ஷணா உம்மையே சரணமென நம்பினேன்
விமலனே என்னைவைத் தாதரிக்க,

முடுகு.

உம்முடைய மதிமுகம் வாடும்படியே
உத்தமிநான் ஒருபொழுதும் நடக்கமாட்டேன்
பெண்ணிவள் என்றெண்ணி எந்தனைநீர்
ப்ரேமையுடனே காத்தருள்வீர் பிராணநாதா.

---

## 76 (சோபானே.)

1 இந்திரனோ சந்திரனோ தந்திரன் தானோ
சுந்தரென்று பேயர்கொண்ட சொக்கரே தானோ
சந்ததமும் மென்னைக்காக்கும் சற்குணனோசங்கரனோ
சந்தோஷமாய் ஸரஸமாடும் சற்ஜனரக்ஷகனோ (சோ)

2 தேனோஅறுந் தேன்சுவைபோ தேவர்தெள்ளமுதோ
தெள்ளமுதினுமுற்ற உள்ளமுது தானோ
ஊனோ என்னுள்ளுயிரோ உயிருக்குயிரோ உறுதுணையோ
தானகவேவந்த என் தவப்பயனோ. (சோ)

3 ஈராறு கண்படைத்த எந்தன்குமரனோ
பாரெல்லாம் பரவிநிற்கும் பரமன் மைந்தனோ
காக்கவந்த காவலனோ கண்மணியோ நன்மணியோ
பார்க்கவந்த பாவலனோ என்பார்த்திபன்தானோ (சோ)

4 மங்கள வுல்லாஸனோ மாதுநேசனோ
சங்கையின்றி ஸரஸமொழியாடும் ஸர்ஜனவாஸனோ
திங்களணி ஈசனீன்ற எங்கள்முருகனோ மால்மருகனோ
மங்கை வள்ளிதன்னைக்கூடி மகிழும் தீரனோ (சோ)

---

## 77 [கோலாட்டப் பாட்டுகள். ஸாதாமேட்டு)

1 சிங்காரச்சோலையிலே மீனாக்ஷி திருக்கோலாடையிலே
மங்களவுல்லாஸ மகிழ்ச்சிதனேயும் மண்டலம்புகழ்ந்தோங்க.

2 கோதிக்கூந்தல்முடித்து மீனாக்ஷி குடைமல்லி ஸம்பங்கி
ஜாதிமருரோஜா முல்லைபாரீஜாதம் ஜடைதனில்மலர்முடித்து.

3 தலையில்சுட்டிப்பிரையும் அதன்பின் சலங்கைகட்டிய நாகர்
வலைப்பின்னலுக்குஜடைநாகம்ஹம்ஸம் வரிசையுடனேசூட்டி.

4 ஜடைபின்னித்தலைகட்டி மீனாக்ஷி ஜல்தியில் பொட்டிட்டு
இடையிலேமேக வர்ணச்சேலைகட்டி ஏற்றரவிக்கைபூட்டி.

5 பட்டைக்கல்லட்டிகையும் கழுத்தில் பவுன்மாலை சங்கிலியும்
திட்டமாய்மல்லிகைஒட்யாணமிடையினில்சிலம்புகட்டியவங்கி.

6 கட்டடவைரத்தோடு காதில்பட்டைக்கல் பச்சைத்தொங்கல்
பட்டைச்சிகப்பு வைரமூக்குத்திகள் பாங்குடனிருபுரமும்.

7 முன்கையில்கெட்டிகாப்புஅதன்முன்முருக்குகொலுசுபாட்டில்
பின்கையில்ஸன்ன க்ளாஸ்பம்பாய்வளை பெருமையுடனேபூட்டி.

8 பாதத்தில்தண்டைசிலம்புஅத்துடன்பட்டைகொலுசுமெட்டி
வீதமாகக்கையில்ஸொகுஸானமோதிரம்வைரத்தடைநெளியாம்.

## 78 ஸாதாமேட்டு. வேறு.

1 செந்தூர்வாழ்வடிவேலன்-ஜெகம்புகழ்சேவைக்குகந்தகோலன்
சுந்தரிதவபாலன்—சுப்ரமாய் சிந்தைமகிழும்லோலன்.

2 அதிசூரஸங்காரன்—அகிலத்தில் அதிசயசிங்காரன்
நிதிகளுக்காதரரன்—நித்திய கெதிதருமுபகாரன்.

3 அறுமறைக்கநுகூலன்—அகமகிழ் அறுமுக வடிவேலன்
திருமுக குணசீலன்—சிங்கார குறுமலரணிலோலன்.

4 கட்டழகியர்மாரன்—கண்களி, வட்டவதனதீரன்
சட்டதிட்டகெம்பீரன்-தரைதனில்இஷ்டத்திற்கொய்யாரன்.

5 நள்ளிருள்தனைப்பாத்தே-நயமாகவள்ளியைகொள்ளக்காத்தே
கள்ளமாய்மணம்தீர்த்தே-கடுகினில்பள்ளியறையில் சேர்த்தே.

6 சுந்தரவள்ளிநேசன்—துரைஸாமி சிந்தைதனிலேவாஸன்
இந்துமுகவுல்லாஸன்—இலங்கும் செந்தமிழ்க்கருள் நேசன்.

### 79 (ஸ்ரீராமச்சந்திரனே) என்ற மெட்டு.

1 தங்கைகாள் வாருங்கடி இங்கிதக்கோலடிப்போம்
சங்கை யில்லாமலேநாம் ஸங்கீதம்
பாடுவோம் கோல் ஆடுவோம். (தங்கை)

2 கோதிச்சிகை முடித்து ஜோதிமயமதாக
கோலக்காம்பிடித்து கூடுவோம்
கூடுவோம் கோல் ஆடுவோம். (தங்கை)

3 நம்மையாள் { Queen Mary / க்வீன் மேரி } நட்புறும் { George / ஜார்ஜு } ஐந்தின
செங்கோல் செழித்திடவே போற்றுவோம்
போற்றுவோம் புகழ் சாற்றுவோம். (தங்கை)

4 செந்தமிழ் துரைஸாமி செப்பும்பதந்தன்னை
சுந்தரமாகவேநாம் சொல்லுவோம்
சொல்லுவோம் சுரம் வெல்லுவோம். (தங்கை)

இராகம்-ஆரபி-ஆதி-தாளம்.

### 80 (முத்திநெறி யறியாத) என்ற தேவார மெட்டு.

1 பின்னல்கோல் நாமடிப்போம் பிர்மாநந்தமுதாக
தன்மயமாய் கற்றுணர்ந்த தையலர்களெல்லோரும்
சின்னஞ்சிறு பாலிகைகள் சிந்தைதெளிவுறவருள்
செய்திடுவீ ரிச்சமயம் திவ்வியபராபரமயமே.

2 மங்களமே மாமணியே மணியின்கண் மணியொளியே
ஒளியின்கண் ஒளிருறும் உன்னதப்பொன்மணியே
மணிச்சுடர் போலொளிரும் மன்னன்துரை ஸ்வாமிபுகல்
தமிழ்பதமே தையலர்க்கு தத்துவமாய் நின்றருள்.

### 81 (மலடிவயிற்று மகன்போலே) என்ற திருப்புகழ் மெட்டு.

1 சுற்றிநின் றெல்லோரும் கோலாட்டம்......நாம்
சுழன்று வளைந்தாடும் காலாட்டம்......களிப்
புற்றுநாமோடும் விளையாட்டம்......கொண்டாட்டம்.

2 சாதுர்ய வித்தைகள் நாம்கற்று......பெண்கள்
சங்கத்தைக் கருதியே நாமுற்று..............மிக
மாதுர்ய வார்த்தைகள் சிறப்புற்று......களிப்புற்று.

3 சிந்தை துலங்கிட வந்தனமே......நாம்
சீர்பெறவென்றுமே முந்தினமே......நம்
இந்து துரைஸாமி பதம் தினமே......தந்தனமே.

## 82 (ஜகமதிற் குறைவின்றி மாதமும்மாரி) என்ற மெட்டு.

1 பின்னல்கோலாட்டம் விளையாடுவோம் பிர்மாநந்தமாக
நன்னயமெட்டுடன் நாகரீகமாக நாட்டினில் புகழோங்க.

2 இந்தநிலவினில் எல்லோருமாக பந்தமாய்விளையாட
சந்ததமும்நாம் சந்தோஷமாகவே ஸபையோர்கள் மனங்
[களிக்க.

3 கனவிலும்நனவிலும் மனதிலுமெண்ணி பண்படித்தாடிடவே
கனமுடனேநாம்கவிதுரைஸாமியின்கானத்தைப்பாடிடவே.

## 83 (பூமிமேச்சிம்) என்ற காவடிச்சிந்து மெட்டு.

கண்ணிகள்.

1 பின்னல் கோலாட்டமே உன்னதமாக நாம்
போடுவோம் பண்கள்பாடுவோம் ஓடியாடுவோம்-என்றும்
சின்னஞ்சிறுமிகள் உன்னிவிளையாட
நாடுவோம் எல்லாம் கூடுவோம்.

2 விதவிதமாகவே விளையாட்டுகள் நாம
வேண்டுவோம்மனம்தூண்டுவோம் ஓடித்தாண்டுவோம்-நாங்கள்
இதம்பெறவே ஜக மதில்சுற்றியே கல்வி
வேண்டுவோம் மதி தூண்டுவோம்.

3 தேவாமிருதமாக தித்திக்கும் தமிழ்தன்னை
செப்புவோம் மனம் கப்புவோம்
பண்கள் ஒப்புவோம்-பாரில்
நாவார துரைஸாமி கவிலும் பதத்தையே
செப்புவோம் சுரம் அப்புவோம்.

## பாம்புக்கோலாட்டம்.

### 84 (வாடாப்பூவாடி மானேமயிலே) என்ற மெட்டு.

1 ஆடையாபரண பூஷிதையாகவே
ஆடிப்பாடி நாம் கொண்டாட
தேடி எல்லோரும் ஜோடியதாகவே
கூடிவிளையாடக் கோலாட்டம்.

2 வாஸக்களபங்கள் வீசப்பரிமளம்
வாரிக்குழைத்துப் பூசிக்கொண்டு
நேசமாய் ஜவ்வாது நெற்றித்திலகமிட்டு
வீசிக்கைவிளையாடக் கோலாட்டம்.

3 சின்னவயதினில் சினேசமதாகவே
சிங்காரநந்த வனந்தனிலே
உன்னதமாகவும் உத்ஸகமாகவும்
ஓடி விளையாடக் கோலாட்டம்.

4 அன்னமின்னநடை சின்னப்பின்னல்ஜடை
மின்னலிடைநிகர் மெல்லியர்கள்
புன்னகை தன்னுடன் சொல்நயம் பேசியே
புகழ்ந்துவிளையாடக் கோலாட்டம்.

5 ஸங்கீதம் ராகம் தானம் பல்லவி
இங்கிதமாகவே இசையுடனே
மங்கள மாகநாம் துரைஸாமி பதம்பாடி
மகிழ்ந்து விளையாடக் கோலாட்டம்.

### 85 இங்கிலீஷ்.

(இகையாலனே வானிதோ) என்ற மெட்டு.

பல்லவி.

Come and meet me my dear
கம் மண் மீட் மீ மை டியர்
You need not at all fear { Come
யூ நீட் நாட் அட் டால் பியர் { கம்

சரணங்கள்

1 I am always loving dear
ஐ யாம் ஆல்வேஸ் லவிங் டியர்
And pray God to have you ever { Come
அண்ட் ப்ரே காட் டு ஹாவ் யூ யெவர் { கம்

2 When I want to be a friend
வென் ஐ வாண்ட் டு பி பெ பிரண்டு
hoping to be there will be no end { Come
ஹோபிங் டு பி தேர் வில் பி நோ யெண்ட் { கம்

---

86 (இந்த நந்தவனத்தின் சுந்தரம்பாரடி) என்ற மெட்டு.

1 Shall we my dear lady, play along in this night.
ஷல் வி மை டியர் லேடி, ப்ளே யெலாங் இன் திஸ் நைட்
Sure I am you will not reject
ஷ்யூர் ஐ யாம் யூ வில் நாட் ரிஜக்ட்.
In my sight, Sure I am..........reject
இன் மை ஸைட், ஷ்யூர் ஐ யாம்..............ரிஜக்ட்
Will you my dear fill your desire
வில் யூ மை டியர் பில் யுவர் டிஸைர்
Tell me don't fear come to me near (Shall)
டெல் மீ டோண்ட் பியர் கம் டு மீ நியர் (ஷல்.)

2 We shall now sing our friend
வி ஷல் நவ் ஸிங் அவர் பிரண்ட்
Doraisamy's pleasant song
துரைஸாமீஸ் ப்ளெஸெண்ட் ஸாங்
How sweet to be heard along
ஹௌ ஸ்வீட் டு பி ஹேர்ட் யெலாங்
Sing song, how sweet...........along.
ஸிங் ஸாங், ஹௌ ஸ்வீட் ............யெலாங்.
Lend your ear mend your fear.
லெண்ட் யுவர் இயர் மெண்ட் யுவர் பியர்.
Come to me near enjoy thy year (Shall)
கம் டு மீ நியர் யெஞ்ஜாய் தை இயர் (ஷல்.)

## 87 (ஸ்ரீராமச்சந்திரனே) என்ற மெட்டு.

1 How are you my dear, why do you so fear
ஹௌ ஆர் யூ மை டியர், ஒய் டு யூ ஸோ பியர்
Now we shall play here come, come, come,
நவ் வி ஷல் ப்ளே ஹியர் கம் கம் கம்,
Lady my lovely lady now. (How)
லேடி மை லவ்லி லேடி நவ். (ஹௌ)

2 Shall we play one another
ஷல் வி ப்ளே ஒன் அனதர்.
Will you please sit together
வில் யூ ப்ளீஸ் ஸிட் டுகெதர்
Tell me your full desire come, come, come.
டெல் மீ யுவர் புல் டிஸைர் கம், கம், கம்.
Go on my dear go on now (How)
கோ ஆன் மை டியர் கோ ஆன் நவ். (ஹௌ)

3 Do we now sing our Doraisamy's song here
டு வி நவ் ஸிங் அவர் துரைஸாமீஸ் ஸாங் ஹியர்
Sweetest of all we learn come, come, come.
ஸ்வீட்ஸ்ட் ஆப் ஆல் வி லெர்ன் கம், கம், கம்.
Wishing you dear wishing you. (How)
விஷ்ஷிங் யூ டியர் விஷ்ஷிங் யூ. (ஹௌ)

---

## 88 (நோட்) மெட்டு.

1 Allthough you are black my dear
ஆல்தோ யூ ஆர் பிளாக் மை டியர்
You are always in my mind
யூ ஆர் ஆல்வேஸ் இன் மை மைண்ட்
You are always you are always always always
யூ ஆருல்வேஸ் யூ ஆருல்வேஸ் ஆல்வேஸ் ஆல்வேஸ்
You are always in my mind.
யூ ஆருல்வேஸ் யின் மை மைன்ட்.

2 Unless you give me nice a kiss
அன்லஸ் யூ கிவ் மீ நைஸ் எ கிஸ்
I never let you pass
ஐ நெவர் லெட் யூ பாஸ்
I never let I never let never never
ஐ நெவர் லெட் ஐ நெவர் லெட் நெவர் நெவர்
I never let you pass
ஐ நெவர் லெட் யூ பாஸ்.

3 Love our Dorai samy's song
லவ் அவர் துரை ஸாமீஸ் ஸாங்
We shall now to enjoy long
வி ஷல் நவ் டு என்ஜாய் லாங
We shall now we shall now shall now shall now
வி ஷல் நவ் வி ஷல் நவ் ஷல் நவ் ஷல் நவ்
We shall now to enjoy long.
வி ஷல் நவ் டு என்ஜாய் லாங்.

545

## 89. மங்களம்.

இ-ம் அசாவேரி ஆதி-தாளம்

பல்லவி

மீனுகூஷியம்மனுக்கு ஜெயமங்களம் திவ்ய
மாணபரணனுக்கு சுபமங்களம் (மீ)

அநுபல்லவி

தேன்மொழி வன்னிகரும் தெய்வானை தேவிக்கும்
ஸேனபதியான சிவசுப்ரமண்யனுக்கும். (மீ)

சரணங்கள்.

1 சித்திகணபதிக்கும் முத்தமிழ்க்கதிபதிக்கும்
சத்யவிலாஸனுக்கும் ஸங்கீத தாஸனுக்கும்
சுத்தமன நேசனுக்கும் முத்திப்ரகாசனுக்கும்
ரத்தினகிரீசனுக்கும் ராதாவிலாஸனுக்கும். (மீ)

2 பாவலர்க்கும்பூவலர்க்கும் காவலர்க்குங்கோவலர்க்கும்
மூவுல கங்களுக்கும் மூவரசர்கள்தமக்கும்
ஐவர்பஞ்ச பாண்டவர்க்கும் ஜீவரத்நக் கற்பினர்க்கும்
நாவலன் துரை ஸாமிபதம் நட்பாய்ப் படிப்பவர்க்கும். (மீ)

கல்யாண சந்திரிகை. முற்றிற்று.

---

இப்புத்தகத்தின் டைட்டில்பேஜ், 1, 2, பாரங்கள் வரையில் மதுரை வடக்குமாசிவீதி மனோன்மணி விலாசம் பிரஸிலும், 3, 4, 5, 6, பாரங்கள் மதுரை வடக்குமாசிவீதி ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸிலும் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

Work of Art must speak for itself,

# DORAY.

## PHOTO ROYAL ARTIST,

## Madura.

☞ ·BY SPECIAL APPOINTMENT TO

*Ettiapuram Samastanam.*

***One of the surest methods of cementing friendship is that of taking Photos & sending them to their friends.***

Charges Moderate.

Trial Order Solicited